# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2067/24 - 2018 අප්‍රේල් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.19

**2067/24 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாணத்தின் மாகாண சபை**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டத்தின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரை நியமித்தல்

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய நான், மத்திய மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டத்தின் இலக்கம் 03 (1) மற்றும் (2) பந்திகளின் சட்டதிட்டங்களுக்குக் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஹல்லொலுவ, பல்லேகம, பரிகம வீதியின், இல. 114/ஏ எனும் இடத்தில் வசிக்கும் திரு. பீ. டப்ளியு. எம். பாலித சிறிசேன அவர்கள், 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**எதிரிவீர வீரவர்தன,**
வீதி அபிவிருத்தி, போக்குவரத்து,
மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும்
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்,
மத்திய மாகாணம்.

*5 - 89/1*


1A - PG4008 - 37 (2018/04)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாணத்தின் மாகாண சபை**

*மத்திய மாகாண மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டத்தின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவி மற்றும் நிர்வாகக்குழு அங்கத்துவத்தினை நீக்குதல்*

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய நான், மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டத்தின் 1 ஆம் பகுதியின் இலக்கம் 03 (1) மற்றும் (2) பந்திகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, 2015.06.24 ஆம் திகதிய 1920/21 ஆம் இலக்க திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக என்னால் நியமிக்கப்பட்ட, மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் திரு. ஐ. டப்ளியு. யூ. உபேபால அவர்கள், அந் நியதிச்சட்டத்திலேயே 1 ஆம் பகுதியில் 3 (8) பந்திக்கு அமைவாக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக 2018, ஏப்பிறல் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவியில் இருந்து / நிர்வாகக் குழு அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்படுகின்றார் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**எதிரிவீர வீரவர்தன,**
வீதி அபிவிருத்தி, போக்குவரத்து,
மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும்
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்,
மத்திய மாகாணம்.

5 - 89/2